DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.34/2026**
Prosecution Witness P.W.10

| | |
|---|---|
| Name:**திரு.ராஜகோபால்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

**நாள்: 22.06.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் பெரியகுளம், தென்கரை, தெற்கு புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் வங்கி மேலாளராக இருந்து பணி ஓய்வுபெற்று விட்டேன். சாட்சிகள் கார்த்திகேயன், முத்துக்காமாட்சி, தணிகைவேல், நந்தகுமார் ஆகியோரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி முத்தையாவைத் தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்த பாண்டியா என்பவர் இறந்துவிட்டார், அதுகுறித்து ஊர் கூட்டம் போடுவதற்காக மறவர் முன்னேற்ற சங்க கட்டிடத்தில் சாவி என்னிடம் இருந்தது, நான் அதில் தலைவராக இருந்தேன். சாவியை கேட்டதால் கொடுத்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறவர் சங்கத்திற்கு எதிரில் தான் என் வீடு உள்ளது. கொஞ்சநேரம் கழித்து சத்தம் கேட்டது, சண்டையாக இருந்ததால் சங்கத்தை பூட்டி சாவியை வாங்கி கொண்டு வந்துவிட்டேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 11.08.2025ம் தேதியன்று எங்கள் தெருவிலுள்ள மறவர் மன்றத்தில் கூட்டம் நடைபெற்றதென்றும், கூட்டம் முடிந்து இரவு 10.15 மணியளவில் நானும், எனது தெருவைச் சேர்ந்தவர்களும் சங்க கட்டிடத்தின் உள்ளே இருந்தோம் என்றும், அப்போது வெளியில் அலறல் சத்தம் கேட்டதென்றும், நான் வெளியில் வந்து பார்க்கும்போது துளசிமணி இடது பக்க கழுத்தில் கத்திகுத்து காயத்தால் இரத்த வெள்ளத்தில் இருந்தார் என்றும், அப்போது அங்கு முத்தையா கையில் அருவாளுடனும், அவரது அக்கா மகன் தங்கபாண்டி கையில் கத்தியுடனும் கூட்டத்தினரை பார்த்து எங்களை பிடிக்க வராதீர்கள் என்று கூறிக் கொண்டு ஓடினார்கள் என்றும், அது சம்பந்தமாக அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது முத்தையா துளசிமணியை அருவாளால் எறிந்த விபரத்தையும், தங்கபாண்டி, துளசிமணியை கத்தியால் கழுத்தில் குத்திய விபரம் பற்றி தெரிந்து கொண்டேன் என்றும், இந்த விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்களது ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எங்களது சங்கத்தில் தீர்மானப் புத்தகம் வைத்திருப்போம் என்று சொன்னால் சரிதான். சங்க உறுப்பினர்களை மட்டும் தான் சங்கத்தில் அனுமதிப்போம் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/–A.Saravanakumar
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.